கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 124 · 09-11-2025 · ஞாயிறு · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி
Volum 01 · Issue: 124 · 09-11-2025 · Sunday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy

## தேர்தல் ஆணையம் மூலமாக குறுக்கு வழியில் திமுகவை வீழ்த்த முயற்சி": முதல்வர் ஸ்டாலின்

சென்னை: நவ. 9–

“கொள்கை ரீதியாக திமுகவை வீழ்த்த முடியாததால், தேர்தல் ஆணையம் மூலமாக, குறுக்கு வழியில் வீழ்த்த முடியுமா என்று முயற்சி செய்கிறார்கள், அதுதான், சார் (SIR)” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இளைஞரணி சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் நடை பெறும் “திமுக 75 அறிவுத்திருவிழா” நிகழ்வைத் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்து “காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு திமுக 75” நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசும்போது,“ திமுகவின் 75 ஆண்டுகள் பயணத்தை நினைவு கூரும் இந்த விழாவுக்கு, “அறிவுத் திருவிழா” என்று உதயநிதி பெயர் வைத்திருக்கிறார். இதைவிடப் பொருத்தமான தலைப்பு வேறு இருக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த அறிவுத் திருவிழாவை இத்தோடு நிறுத்திவிடாமல், தொடர்ந்து ஆண்டு தோறும் நீங்கள் நடத்திட வேண்டும் என்று அவருக்கு நான் கோரிக்கை வைக்கிறேன்.

முழுக்க முழுக்க சாமானியர்களால் தொடங்கப்பட்டு, 1967ல் முதல் மாநிலக் கட்சியாக ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்த கழக வரலாற்றை, இன்று வரை மீண்டும் மீண்டும் பல்வேறு கோணங்களில், பல ஆய்வாளர்கள் ஆர்வத்துடன் ஆராய்ச்சி செய்து கொண்டே இருக்கிறார்கள். ‘ஏதோ கட்சியைத் தொடங்கினோம், அடுத்த முதலமைச்சர் நான்தான்’ என்று அறிவித்தோம் என்று நாம் ஆட்சிக்கு வரவில்லை.

கழகத்தின் தலைவர்களில் இருந்து, கடைக் கோடித் தொண்டர் வரை, சுற்றிச் சுழன்று பணியாற்றினார்கள். 18 ஆண்டுகள் உயிரைக் கொடுத்து ஒவ்வொருவரும் உழைத்தார்கள். சமூகத்தில் சரிபாதி மக்கள் படிப்பறிவு கூட இல்லாமல் இருந்த காலத்தில், குக்கிராமத்தில் இருக்கும் முடிதிருத்தும் சலூன் கூட மக்களின் சிந்தனையைத் திருத்தும் மையமாக செயல்பட்டது.

சைக்கிள் கடை, டீக்கடை என்று ஒரு இடம் விடாமல், திராவிட இயக்க இதழ்களை ஒரு திமுககாரர் வாசிக்க, அவரைச் சுற்றி பத்து பேர் செவி வழியாகக் கேட்டு உலக வரலாற்றைத் தெரிந்து கொண்டார்கள். கிராமத்தில் இருக்கிறவர்களும் கியூபா புரட்சியை தெரிந்து வைத்திருந்தார்கள். ரஷ்யப் புரட்சியைப் பற்றி படித்து, ஊக்கமும் உறுதியும் பெற்றார்கள். இவ்வாறு நாம் பெற்ற வெற்றி என்பது இனி யாரும் படைக்க முடியாத வரலாற்றுச் சாதனை.

இந்த வரலாறு பற்றியெல்லாம் தெரியாத சிலர், நம்மை மிரட்டிப் பார்க்கிறார்கள். இன்னும் சில அறிவிலிகள் திமுகவைப் போலவே வெற்றி பெறுவோம் என்று பகல்கனவு காண்கிறார்கள். திமுகவைப் போன்று வெற்றி பெற, திமுகவைப் போன்று உழைப்பும், அறிவும் தேவை. ஒரு சூரியன். ஒரு சந்திரன். ஒரு திமுக தான். இனி இப்படியொரு இயக்கம் இந்த மண்ணில் தோன்ற முடியாது.

இந்த வரலாற்றையும் நம்முடைய கொள்கைகளையும் உதயநிதி இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்த்ததால்தான், இளைஞரணிச் செயலாளராக அவர் பொறுப் பேற்றதில் இருந்து, லட்சக்கணக்கான இளைஞர்களை கழகத்துக்குள் கொண்டு வந்திருக்கிறார். இன்றைக்கு வெளியிடப் பட்டிருக்கும், “காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு” புத்தகத் தலைப்பிலேயே, நம்முடைய இயக்கம் எத்தகைய மாபெரும் அறிவுக் கருவூலமாக கொள்கை தீரர்களின் கோட்டமாக இருக்கிறது என்று வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில், இளைஞரணியினருக்கு நான் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன்... இந்தப் புத்தகத்தில் இருக்கும் கட்டுரைகளை, காலத்திற்கு ஏற்ற மாதிரி, வீடியோக்களாக மாற்றி, சோஷியல் மீடியாவில் அனைத்து இளைஞர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்!

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சோனியா காந்தி முதல்




அகில இந்தியத் தலைவர்கள் அனைவரும், தங்கள் பார்வையில் நம்மை அளவிட்டு எழுதியிருக்கிறார்கள். ஒரு மாநிலக் கட்சியை, அகில இந்தியத் தலைவர்களும், மற்ற மாநிலத் தலைவர்களும் புகழ்ந்து எழுதுவது சாதாரணமாக நடந்துவிடாது.

இப்படி, இந்தியாவே போற்றும் இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது. இந்தச் சாதனைகளும் வளர்ச்சியும்தான் பலரின் கண்களை உறுத்துகிறது. நாம் பேசும், சமூகநீதி சுயமரியாதை மாநில சுயாட்சி கூட்டாட்சி ஆகிய கருத்துகள் இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் பரவிவிட்டது!“என்னடா இவர்களைத் தமிழ்நாட்டிலேயே முடக்க நினைத்தால், இந்தியா முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்து கிறார்களே” என்று கோபப்படுகிறார்கள்.

எனவே, நான் பெருமையுடன் சொல்கிறேன். இந்த அறிவுத் திருவிழா, “திராவிடம் வெல்லும், அதைக்காலம் சொல்லும்!” என்று முழங்கும் திருவிழா.

இங்கு இருக்கும் இளைஞரணித் தம்பிமார்களைப் பார்க்கிறபோது, இது கூடிக் கலையும் கூட்டமாக இல்லாமல், காலந்தோறும் கொள்கைகளைக் கூர்தீட்டிக் கொள்ளும் கூட்டமாக இருப்பதால் தான், எத்தனை பெரிய எதிரிகள் வந்தாலும் எத்தனை பெரிய தந்திரங்களைக் கொண்டும் நம்மை வீழ்த்த முடியவில்லை என்று உணர்த்துகிறது. கொள்கை ரீதியாகத் திமுகவை வீழ்த்த முடியாததால், தேர்தல் ஆணையம் மூலமாக, குறுக்கு வழியில் வீழ்த்த முடியுமா என்று முயற்சி செய்கிறார்கள், அதுதான், சார்.

ஏன் இந்த சாரை அவசர அவசரமாக நடத்த வேண்டும்? தேர்தல் நெருக்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் இது வேண்டாம் என்று அனைத்து அரசியல் கட்சிகளும் சொல்லியும், ஏன் நடத்த வேண்டும்? இதையெல்லாம் காது கொடுத்து கேட்காமல், தேர்தல் ஆணையம் சார் பணிகளை தொடங்கிவிட்டார்கள். இதற்கு எதிராகச் சட்டரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம், தொடர்ந்து போராடப் போகிறோம், போராடுவோம், அது வேறு! இந்த நேரத்தில், இளைஞரணியிடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, களத்தில் வேலை செய்யும் நீங்கள், எந்தவொரு போலி வாக்காளரும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! உண்மையான நம்முடைய வாக்காளர்கள் விடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யாருடைய வாக்குரிமையும் பறிபோகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காகக் களப்பணியாற்ற வேண்டும். நம் இயக்க வரலாறு முழுவதுமே போராட்ட வரலாறுதான். நம்முடைய போராட்ட வரலாற்றை நினைவூட்டும் கொள்கைத் திருவிழாதான், இந்த அறிவுத் திருவிழா. முற்போக்கு விழாவாக, கருப்பு சிவப்பு நீலம் சேர்ந்திருக்கும்போது எந்தக் காவியாலும் நம்மை எதுவும் செய்ய முடியாது.

இந்தியாவின் ஜனநாயகத்தையும் தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் காக்க 2019 முதல் தொடரும் நம்முடைய பயணம், 2026 லும் மாபெரும் வெற்றியைப் பெறும்! “திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும்” பெரியாரின் அண்ணாவின் தலைவர் கலைஞரின் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் கொள்கை வாரிசுகள் இருக்கும் வரை, தமிழ்நாடு தலைகுனியாது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## டிசம்பர் 1 முதல் 19 வரை நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்!

புதுடெல்லி: நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் 1 முதல் டிசம்பர் 19ம் தேதி வரை நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

இதுகுறித்து கிரண் ரிஜிஜு வெளியிட்ட எக்ஸ் பதிவில், “நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரை டிசம்பர் 1 முதல் டிசம்பர் 19 வரை கூட்டுவதற்கான மத்திய அரசின் முன்மொழிவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். நமது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் மற்றும் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் ஒரு ஆக்கபூர்வமான, அர்த்தமுள்ள கூட்டத்தொடரை நான் எதிர்நோக்குகிறேன்.” என்று அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக ஜூலை 21 அன்று தொடங்கிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், ஆகஸ்ட் 21 அன்று நிறைவுற்றது. இந்த கூட்டத்தொடர் 32 நாட்களில் 21 அமர்வுகளை கொண்டிருந்தது.

பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்களுக்கான விவாதம் குறித்த எதிர்க்கட்சிகளின் கோரிக்கையால் மழைக்கால கூட்டத்தொடர் தொடர்ந்து பாதிக்கப்பட்டது. இதனால் மழைக்கால கூட்டத்தொடரில் மக்களவையின் செயல்பாடு 31 சதவீதமாகவும், மாநிலங்களவையின் செயல்பாடு 39 சதவீதமாகவும் இருந்தது.

## அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் .இரத்தினசாமி, நேரில் பார்வையிட்டார்.

அரியலூர். நவ. 9–

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், மேலப்பழூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் .இரத்தினசாமி, இன்று (08.11.2025) நேரில் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம். இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவத் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் என பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்





அவர்களால் தமிழ்நாடு முழுவதும் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 02.08.2025 அன்று காணொளி காட்சி மூலம் துவங்கி வைக்கப்பட்டது.

அதன்படி இன்றைய தினம் திருமானூர் ஊராட்சி ஒன்றியம், மேலப்பழூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி களிடம் மருத்துவ சேவைகள் வழங்கப்படுவது குறித்து கேட்டறிந்தார். மேலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் 02 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000 மதிப்பில் திருமண உதவிதொகையும், 02 பயனாளிகளுக்கு தலா ரூ.1200 மதிப்பில் ஓய்வூதியங்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறன் நபர்களுக்கு உதவிகள் பதிவு புத்தகங்களும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும், மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் .இரத்தினசாமி, வழங்கினார்.

மேலும், நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமில் சிறப்பு பிரிவு மருத்துவர்களான எலும்பு முறிவு மருத்துவர், மனநல மருத்துவர், கண் மருத்துவர், குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் பொது மருத்தும் மற்றும் சர்க்கரை நோயியல் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை மருத்துவர், பல் மருத்துவர், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், நரம்பியல் மருத்துவர், தோல்நோய் மருத்துவம், இருதயவியல் மருத்துவர், கதிரியியல் மருத்துவர், ஆகியோர் இம்மருத்துவ முகாமில் பொது மக்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. மேலும், எக்கோ கார்டியோகிராம், அல்ட்ராசோனாகிராம், நடமாடும் எக்ஸ்ரே வாகனம், மற்றும் இரத்த பரிசோதனை சேவைகள் வழங்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் இம்மருத்துவ முகாம்களை பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாமில், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பிரேமி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.மணிவண்ணன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) .பழனிசாமி, மாவட்ட நிலை அலுவலர்கள், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள், இதர அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்ள உள்ள நிகழ்ச்சிக்கான இடத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள்

### அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் ஆகியோர் நேரில் ஆய்வு



திருவள்ளூர் நவ 09 :

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, சுந்தரசோழபுரம் பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்ள உள்ள நிகழ்ச்சிக்கான இடத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் முன்னிலையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமையில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சுந்தரசோழபுரம் பகுதியில், பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி வைத்தல் மற்றும் அடிக்கல் நாட்டு விழா நடைப்பெறவுள்ளது. அதற்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் தொடர்பாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் பல்வேறு துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். அனைத்து பணிகளையும் சிறப்பான முறையில் குறித்த காலத்தில் முடிக்க துரிதமாக செயல்பட சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அறிவுறுத்தினார். இதனைத்தொடர்ந்து, ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய அரசு பணியாளர் தனியார் குடியிருப்பு பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 கணக்கெடுப்பு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கணக்கெடுப்பு படிவங்களை விரைந்து வழங்கி பணிகளை முடிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

இதில் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார் அவர்கள், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, திருவேற்காடு நகர்மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, திருவேற்காடு நகராட்சி ஆணையர் ராமர், வாக்குப்பதிவு அலுவலரும் ஆவடி மாநகராட்சி துணை ஆணையருமான மாரிசெல்வி, உதவி வாக்குப்பதிவு அலுவலரும் ஆவடி வட்டாட்சியருமான கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவிப்பு.

கள்ளக்குறிச்சி நவ 09

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு 2025க்கான அறிவிக்கை எண்.02/2025ன் படி 21.08.2025 அன்று விண்ணப்பதாரர்களிடமிருந்து இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க அறிவுறுத்தப் பட்டது. அதன்படி, மேற்படி பதவிகளுக்கான எழுத்துத்தேர்வு வரும் 09.11.2025 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட தேர்வுமையத்தில் 2743 ஆண் விண்ணப்பதாரர்கள் மற்றும் 834 பெண் விண்ணப்பதாரர்கள் என மொத்தம் 3577 விண்ணப்பதாரர்களுக்கும் எழுத்துத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்கள் இணையதளம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

2) விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கீழ்க்காணும் கல்வி நிறுவன வளாகங்களில் எழுத்துத் தேர்வு நடைபெற உள்ளது.

i. A.K.T. Academy Matric Higher Sec. School, Main Building, A.K.T. Nagar, Neelam angalam, Kallakur ichi.

ii.A.K.T. Engineering College, A.K.T. Nagar, Neelaman galam, Kallaku richi.

iii. A.K.T. CBSE School, A.K.T. Nagar, Neelam angalam, Kallak urichi.

(For Women Candidate)

3) எழுத்துத் தேர்விற்கு வரும் விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கூட சீட்டு (Hall Ticket), புகைப்பட அடையாள அட்டை (Photo Identity Card) மற்றும் கருமைநிற பந்துமுனை எழுதுகோல் (Black Ink Ballpoint Pen) ஆகியவற்றை கண்டிப்பாக கொண்டு வரவேண்டும்.

4) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விற்கு வரும்போது கைப்பேசி (Mobile Phone) மற்றும் எந்தவிதமான எலக்ட்ரானிக் பொருட்களை (Smart watch, Bluetooth Headset, Neck Band) எதையும் கொண்டு வரக்கூடாது.

5) விண்ணப்பதாரர்கள் தேர்வு நாளான 09.11.2025 அன்று காலை சரியாக 08.00 மணிக்கு தங்களது தேர்வு மையத்தில் இருக்கவேண்டும். தேர்வுக்கு வரும் விண்ணப்பதாரர்கள் தங்களது அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை முழுமையாக படித்து தெரிந்து அழைப்புக் கடிதத்துடன் வரவேண்டும். தேர்வுகூட மையத்திற்கு 09.30 மணிக்குமேல் வரும் விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6) கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்தில் இருந்து தேர்வு மையங்களுக்குச் செல்ல சிறப்புப் பேருந்துகள் 09.11.2025 காலை 06.00 மணி முதல் இயக்கப்படும்.

# மதுரவாயலில் தமிழ்நாடு நுகர்வோர் மற்றும் மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்கம் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா :



திருவள்ளூர் நவ 09 : திருவள்ளூர் மாவட்டம் மதுரவாயலில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு நுகர்வோர் மற்றும் மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்கம் சார்பில் மதுரவாயல் பகுதி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா விழா நடைபெற்றது.

தமிழ்நாடு நுகர்வோர் மற்றும் மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்க திருவள்ளூர் மாவட்ட தலைவர் கே.வாசுதேவன் தலைமை தாங்கினார். மாநில துணை தலைவர் பி.பால்ராசு,திருவள்ளூர் மாவட்ட இணை செயலாளர் பி.தேவராஜ், வளசை பகுதி தலைவர் பி.வி.பாபு,மாநில சட்ட ஆலோசகர் வி.தங்கமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகளிர் நல இயக்குநர் எம்.ஷோபியா பேகம், மாநில துணை செயலாளர் பி.யுவராஜ், வடக்கு மண்டல செயலாளர் டி.ராதா கிருஷ்ணன், எஸ்.கார்த்திகேயன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் பி.ஆர்.புஷ்பராஜ் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு நுகர்வோர் மற்றும் மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்கம் என்.புண்ணிய மூர்த்தி,தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் (ஓய்வு) நீதியரசர் துரை. ஜெயச்சந்திரன், தமிழ்நாடு அரசு முன்னாள் தலைமை செயலாளர் இரா. கற்புரசுந்த ரபாண்டியன், பி.ஸ்ரீகுமார் ஆகியோர் கலந்து கொண்டு தமிழ்நாடு நுகர்வோர் மற்றும் மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்கம் சார்பில் மதுரவாயல் பகுதி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை யாற்றினர்.

இதில் நிர்வாகிகள் மோகன கிருஷ்ணன்,புகழ் அழகி,விஜயன் ,கணபதி, கருத்து காமராஜ், ஏழுமலை, லோகநாதன், ச ந்திரலேகா, மூர்த்தி, ரஜினி ரமேஷ்,மூவேந்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







பாரதப் பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் படி, ஸ்ரீ பக்கீம் சந்திரா சட்டர்ஜி வந்தே மாதரம் பாடல் இயற்றி 150 ஆண்டுகள் ஆனதை ஒட்டி மக்களிடம் நேரடியாக பேசும் மனதின் குரல் நிகழ்ச்சியில் வந்தே மாதரம் பாடலை மிகப்பெரிய ஒரு கொண்டாட்டமாக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்கு இணங்க பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைமையின் அறிவுறுத்தலின்படி புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சி மாநில தலைவர் வி பி ராமலிங்கம் வழிகாட்டுதலின்படி புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி திடலில் புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து வந்தே மாதரம் முழு பாடலை பாடினார்கள். வந்தே மாதரம் மற்றும் மனதின் குரல் நிகழ்ச்சியின் மாநில பொறுப்பாளர் க.வெற்றிச்செல்வம் அனைவரையும் வரவேற்றார். தேசிய தலைமையின் அறிவுறுத்தலின்படி சுதேசி உறுதிமொழி மாநிலத் தலைவர் வி பி ராமலிங்கம் வாசிக்க அனைவரும் சுதேசி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், சபாநாயகர் செல்வம், மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் கல்யாண சுந்தரம், தீப்பாய்ந்தான், செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடேசன், அசோக்பாபு, மாநில பொதுச் செயலாளர் மோகன்குமார், லட்சுமிநாராயணன் , மாநிலத் துணைத் தலைவர்கள் ரத்தினவேல், அகிலன், சரவணன், பழனி, செயலாளர்கள் புகழேந்தி, தமிழ்மாறன், கோகிலா,பொருளாளர் ராஜகணபதி, செய்தி தொடர்பாளர் அருள்முருகன், மாவட்ட தலைவர்கள் கிருஷ்ணராஜ், ஓம் அனிதா, மாநில மகளிர் அணி தலைவி தாமரைச்செல்வி, விவசாய அணி தலைவர் பாரதி மோகன், ஊடகப்பிரிவு அமைப்பாளர் நாகேஸ்வரன், தகவல் தொழில்நுட்ப பிரிவு அமைப்பாளர் கார்த்திகேயன், மீனவர் பிரிவு அமைப்பாளர் மாரியப்பன், மருத்துவர் பிரிவு அமைப்பாளர் சிவபெருமான், வல்லுனர் பிரிவு அமைப்பாளர் நாகராஜன், ஆலயம் மற்றும் ஆன்மீகப் பிரிவு அமைப்பாளர் சாய் சுதாகர், மத்திய அரசு திட்டங்களின் அமைப்பாளர் செந்தாமரைக்கண்ணன், கூட்டுறவு பிரிவு அமைப்பாளர் லட்சுமணசாமி, வணிகப்பிரிவு அமைப்பாளர் சத்யராஜ்,மற்றும் மாநில, மாவட்ட ,அணி, பிரிவு, தொகுதி நிர்வாகிகள் பொதுமக்களுடன் இணைந்து வந்தே மாதரம் முழுப் பாடலை பாடினார்கள். வந்தே மாதரம் நிகழ்ச்சியின்மாநில பொறுப்பாளர் க.வெற்றிச்செல்வம், இணைப் பொறுப்பாளர்கள் சக்திவேல் ரௌத்திரம் மற்றும் மீனாட்சி சுந்தரம் குழுவினர் ஏற்பாடுகளை செய்தனர்.

# பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் சீருடையில் வந்து அசத்திய எஸ்எம்சி நிர்வாகிகள்...!





வந்தவாசி, நவ 09

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சி.ம.புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நேற்று பள்ளி மேலாண்மை குழு கூட்டம் பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.நம்பெருமாள் தலைமையில் நடைபெற்றது. எஸ்எம்சி தலைவர் தமிழ்ச் செல்வி, கல்வியாளர் பொன்.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை தலைவர் துர்காதேவி வரவேற்றார். மேலும் பள்ளி செயல்பாடுகள், மாணவர்களின் கற்றல் திறன் உள்ளிட்டவை விவாதிக்கப்பட்டது. மேலும் பள்ளியில் இயங்காத நிலையில் உள்ள மின்சாதன பொருட்களான தொலைக்காட்சி, லேப்டாப் உள்ளிட்டவைகளை தொடக்க கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் உதவி ஆசிரியை பாரதி நன்றி கூறினார்.

# வைகை அணையில் இருந்து பாசன நிலங்களுக்கு நீர் திறப்பு:

## கரையோர மக்களுக்கு எச்சரிக்கை

தேனி: நவ.9–

வைகை அணையில் இருந்து மதுரை மாவட்டத்தின் பூர்வீக பாசன நிலங்களுக்கு நீர் திறக்கப்பட்டுள்ளது. வைகை அணையில் இருந்து இன்று முதல் 6 நாட்களுக்கு 1,000 கனஅடி விதம் தண்ணீர் திறக்கப்படும். வைகை அணையில் இருந்து 6 நாட்களுக்கு நீர் திறப்பதால் 35,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். வைகை அணையில் நீர் திறப்பால் திண்டுக்கல், மதுரை மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் யாரும் ஆற்றை கடக்கவோ, குளிக்கவோ வேண்டாம் என பொதுப்பணித்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அறந்தாங்கி புதிய பேருந்து நிலைய அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வாரச்சந்தை வியாபாரிகள் கருப்பு பேட்ச் அணிந்து கண்டன ஆர்ப்பாட்டம்



அறந்தாங்கி நவ. 9

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் புதிய பேருந்து நிலைய அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வாரச்சந்தை வியாபாரிகள் கருப்பு பேட்ச் அணிந்து கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர்

அறந்தாங்கியில் இயங்கி வரும் வார சந்தையின் ஒரு பகுதியில் தற்போது புதிய பேருந்து நிலையம் அமைவது குறித்த அரசாணையை தமிழக அரசு அறிவித்துள்ள நிலையில்

சுமார் 7.30 ஏக்கர் பரப்பளவு கொன்ட அறந்தாங்கி வாரச் சந்தையில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை அன்று சந்தை நடைபெறும்

சந்தை நடைபெறும் தினத்தில் அறந்தாங்கி மட்டுமல்லாது சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பல வியாபாரிகள் இச்சந்தையில் வியாபாரம் செய்து வருகின்றனர்

தற்போது அரசு வாரச்சந்தை நடைபெறும் இடத்தில் ஒரு பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அரசாணையை வெளியிட்டது .இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாரச்சந்தை வியாபாரிகள் இன்று அறந்தாங்கியில் உண்ணாவிரத போராட்டம் நடத்த இருந்தனர்..

இந்நிலையில் இப்போராட்டத்திற்கு காவல்துறையினர் அனுமதி மறுத்ததால்..

போராட்டத்தில் ஈடுபட இருந்த வாரச்சந்தை வியாபாரிகள் சந்தை பகுதியில் இருந்து ஊர்வலமாக சென்று அறந்தாங்கி அம்மா உணவகம் முன்பு புதிய பேருந்து நிலையம் வார சந்தைக்குள் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன கோஷங்கள் எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சேலத்தில் ஏற்காடு அருகே 25 அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்ததில் ஒருவர் பலி, 2 பேர் காயம்.



சேலம், நவ. 9–

ஏற்காடு காக்கம்பாடி கிராமத்தில் கொண்டை ஊசி வளைவு அருகே 25 அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்ததில் ஒருவர் பலியானார்,2 பேர் காயமடைந்தனர்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கீரைக்காடு பகுதியில் உள்ள தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்று உள்ளது. இந்த நிறுனத்தில் தங்கி பணி புரியும் சென்னையை சேர்ந்த நவீன் (32), கள்ளக்குறிச்சியை சேர்ந்த ஈஸ்வர் (23) மற்றும் பெரம்பலூர் பகுதியைச் சேர்ந்த பிரசாந்த் (32) ஆகிய மூன்று வெள்ளிக்கிழமை இரவு மது அருந்திவிட்டு இரவு சுமார் 12 மணியளவில் அலுவலக பயண காரில் காக்கம்பாடி பகுதியில் உள்ள கொண்டை ஊசி வளைவு அருகே சென்று கொண்டிருந்த போது, கட்டுப்பாட்டை இழந்த கார் 25 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது.

கார் விபத்துக்குள்ளானதும் காரிலிருந்து வெளியே வர முடியாமல் காரில் இருந்தவர்கள் கூச்சலிட்டுள்ளனர்.

இதையடுத்து அருகில் இருந்த கிராம மக்கள் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது கார் விபத்துக்குள்ளானது தெரியவந்துள்ளது.

உடனடியாக அவர்கள் ஏற்காடு காவல்துறையினருக்கும் 108 ஆம்புலன்ஸ்க்கும் தகவல் கொடுத்துவிட்டு காரில் இருந்தவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனிடையே, தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், அந்தப் பகுதியிலிருந்த பொது மக்கள் உதவியுடன் மீட்டகப்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸில் ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்தில் பலியான பிரசாந்த் உடல் உடல்கூறாய்வுக்காக ஏற்காடு மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து ஏற்காடு போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பராமரிப்பு செய்ய பொதுமக்கள் கோரிக்கை



திருச்சி மாவட்டம் வையம்பட்டி ஒன்றியம் எளமனம் ஊராட்சியில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றனர் அவர்கள் இந்த பழுதடைந்த நீர் தேக்க தொட்டியின் குடிநீரை பயன்படுத்துவதால் பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் அவதி. பலமுறை புகார் செய்தும் கண்டுகொள்ளாத அதிகாரிகள்.





திருச்சி மாவட்டம் மணப்பாறை உட் கோட்டம் வையம்பட்டி காவல் நிலையம் உதவி ஆய்வாளர். திரு மாதேஷ் அவர்கள் தலைமையில் காவலர்கள் வாகன சோதனையில் ஈடுபட்ட போது.

# திமுக மீண்டும் ஆட்சியமைக்க களப்பணியாற்ற வேண்டும்.

## அமைச்சர் ரா.ராஜேந்திரன் வேண்டுகோள்.



சேலம்: நவ. 9–

திமுக மீண்டும் ஆட்சி அமைக்க அனைவரும் தீவிர களப் பணியாற்ற வேண்டும் என சுற்றுலாத் துறை அமைச்சர் ரா. ராஜேந்திரன் தெரிவித்தார்.

திமுக மாணவரணி மாநகர, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சேலம், கருப்பூரில் உள்ள தனியார் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. திமுக மாணவரணி மாநிலச் செயலாளர் ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அமைச்சர் ரா.ராஜேந்திரன், மக்களவை உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அமைச்சர் ரா.ராஜேந்திரன் பேசியதாவது:

திமுக என்ற பேரியக்கத்தை தொடங்கும் போதே மாணவர் அணியை அண்ணா உருவாக்கினார். 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் மாணவர் அணியின் பங்கு மகத்தானது. ஆட்சி மாற்றத்துக்கே வித்திட்டனர். அந்த அணியில் துரைமுருகன் உள்ளிட்டோர் இயக்கத்தை வழிநடத்தியுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக இருந்துள்ளேன். 7 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் இருந்தேன். பின்னர் படிப்படியாக இளைஞரணி உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளேன். எனவே, இன, மொழி உணர்வுடன் கொள்கை, கோட்பாடுகளைப் பின்பற்றி மாணவர் அணியை திறம்பட கட்டமைக்க வேண்டும். வரும் பேரவைத் தேர்தலில் மீண்டும் திமுக ஆட்சி மலர மாணவர் அணியினர் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்றார்.

மாணவர் அணி மாநில துணை செயலாளர்கள் சேலம் தமிழரசன், மன்னை த.சோழராஜன், அதலை பி.செந்தில்குமார் உள்பட மாநகர, மாவட்ட, மாநில மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம் துடுப்பதி பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் – 2026 குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தினை பொதுமக்களுக்கு வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் திட்ட இயக்குனர் பிரியா உள்ளார்.

# மணப்பாறையில் புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு பேரணி




திருச்சி மாவட்டம், மணப்பாறை விண்மதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சார்பில் புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. வாகைக்குளம் சாலையில் இருந்து புறப்பட்ட பேரணி நகரின் கோவில்பட்டி சாலை, ராஜவீதி முக்கிய வீதிகளின் வழியாக சென்ற மீண்டும் பள்ளியை சென்றடைந்தது. பேரணியின் போது புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் நம்பிக்கை மட்டுமே நமது ஆயுதம் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்திச் சென்றனர். பேரணியில் திரளான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# மணப்பாறையில் ஹாக்கி விளையாட்டு தொடங்கி 100 வருடம் கொண்டாடிய தனியார் பள்ளி மாணவர்கள், மாணவிகள்




இந்தியாவில் ஹாக்கி விளையாட்டு தொடங்கி 100 வருடம் எட்டியத்தை ஒட்டி இந்தியா முழுவதும் நேற்று ஹாக்கி போட்டிகள் கொண்டாட்டம் நடைபெற்றது. இந்நிலையில் திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த உசிலம்பட்டியில் செயல்பட்டு வரும் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆண்கள் மட்டும் பெண்களுக்கான ஹாக்கி போட்டி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வானது பள்ளியின் தலைமை ஆசிரியர் என்.கே. லதா தலைமையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் வழங்கப்பட்டன. பின்னர் சிறப்பு அழைப்பாளர்களுக்கு கௌரவம் செய்யப்பட்டது

# ஈரோடு மாவட்டம் நசியனூர் பேரூராட்சி 16. 50 கோடியில் குடிநீர் அபிவிருத்தி திட்டம்.. பவானி ஆற்றில் இருந்து 23. 73 கிலோமீட்டர் தொலைவிற்கு குழாய்கள் பதிப்பு..



ஈரோடு., 09

ஈரோடு மாவட்டம் நசியனூர் பேரூராட்சியில் கலைஞர் நகர் புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 16. 50 கோடி திட்ட மதிப்பீட்டில் பவானி ஆற்றில் இருந்து நீர் ஏற்றம் செய்யப்பட்டு சுத்திகரித்து வழங்கும் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது இதன் மூலம் அனைத்து வீடுகளுக்கும் தடையற்ற குடிநீர் வினியோகம் செய்யப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள முதல் நிலை பேரூராட்சிகளில் நசியனூர் பேரூராட்சி ஒன்று. சேலம் டு கொச்சி தேசிய நெடுஞ் சாலையில் ஈரோடு மாநகராட்சி எல்லையில் உள்ள இந்த பேரூராட்சியின் பரப்பளவு, 17 புள்ளி 58 சதுர கிலோமீட்டர். 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்த பேரூராட்சியின் மக்கள் தொகை 10. 970. தற்போதைய மக்கள் தொகை 12 ஆயிரம் ஆக உயர்ந்து உள்ளது.

இந்த பேரூராட்சியின் மொத்த குடியிருப்புகள் எண்ணிக்கை 5153 மாவட்ட தலைமை இடத்தில் இருந்து எட்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளதால் மிக வேகமாக வளர்ந்து வரும் நசியனூர் பேரூராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சித்தோடு முதல் சென்னிமலை வரை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் சராசரியாக 10 லட்சம் லிட்டர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலம் 280 லட்சம் லிட்டர் தண்ணீர் தினசரி புறப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு.

ஆனால் மாநகராட்சி எல்லை பகுதியை ஒட்டி அமைந்துள்ளதால் வளர்ந்து வரும் பேரூராட்சியாக உள்ளதால் வரும் காலங்களில் மக்கள் தொகை குடியிருப்புகளின் எண்ணிக்கை கணிசமாக உயரக்கூடிய வாய்ப்புகள் உள்ளது இதனால் குடிநீரின் தேவை அதிகரிப்பதோடு பற்றாக்குறை சூழல் ஏற்படும் நிலை உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு குடிநீர் விரிவாக்க திட்டத்தை செயல்படுத்த பேரூராட்சி தலைவர் மோகனப்பிரியா லோகேஸ்வரன், கவுன்சிலர்கள் மற்றும் அதிகாரிகள் ஒத்துழைப்புடன் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். இதனை அடுத்து கலைஞர் நகர் புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 16.50 கோடியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த நிர்வாக அனுமதியும் தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இந்தப் பணிக்காக தண்ணீர் சேகரிப்பு கிணறு நூறு லட்சம் கொள்ளளவு கொண்ட இரண்டு நீருந்து நிலையங்கள், ஒரு லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரு மேல்நிலை தொட்டிகள் கட்டப்பட உள்ளது. பவானி ஆற்றில் நீர் ஏற்றம் செய்யப்படும் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு குழாய் மூலம் கொண்டுவரப்பட்டு சுத்திகரித்து விநியோகம் குழாய்கள் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக 300 எம் எம், 250 எம் எம், 200 எம்எம், 150 எம் எம் மற்றும் நூறு எம் எம் விட்டம் கொண்ட டி ஐ குழாய்கள் பதிக்கப்பட உள்ளது. பவானி ஆற்றில் இருந்து சுமார் 23.73 கிலோ மீட்டர் தொலைவிற்கு குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதுகுறித்து நசியனூர் பேரூராட்சி தலைவர் மோகனப்பிரியா லோகேஸ்வரன் தெரிவிக்கையில்.. வளரும் பேரூராட்சியான நசியனூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் குடியிருப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருக

விரிவடையும் நகரில் அதிகரிக்கும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நசியனூர் பேரூராட்சிக் என தனி குடிநீர் திட்டம் செயல்படுத்துவது மிக அவசியமானது. இது குறித்து தமிழ்நாடு வீட்டு வசதி துறை அமைச்சர் சு. முத்துசாமியை சந்தித்து தொடர்ந்து வலியுறுத்தி. மேலும் சென்னையில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும் சந்தித்து குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு கலைஞர் நகர் புற மேம்பாட்டு திட்டத்தில், இந்தத் திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 16.50 கோடி நிதி ஒதுக்கி உள்ளது இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போது நசியனூர் பகுதியில் தற்போதைய குடிநீர் தேவை மட்டும் இன்றி, எதிர்கால குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும் என அவர்.

# 3,665 காவலர் பணியிடங்களுக்கு இன்று எழுத்து தேர்வு 2.25 லட்சம் பேர் கடும் போட்டி

சென்னை: நவ. 9–

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், கடந்த ஆகஸ்ட் மாதம் காவல் துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத் துறைகளில் காலியாக உள்ள 3,665 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிட்டது.

இதில், காவல் துறையில் 2,833 காவலர்கள், சிறைத் துறையில் 180 சிறைக் காவலர்கள், தீயணைப்புத் துறையில் 631 தீயணைப்பாளர்கள் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு பணியிடங்கள் 21 ஆகியவை அடங்கும். இந்த காலிப் பணியிடங்களுக்காக மாநிலம் முழுவதும் சுமார் 2.25 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், அவர்களுக்கான எழுத்துத் தேர்வு இன்று நடைபெற உள்ளது. மாநிலம் முழுவதும் 45 மையங்களில் பலத்த பாதுகாப்புடன் நடைபெறும் இத்தேர்வில் முறைகேடுகளைத் தடுக்கும் விதமாக முதல்முறையாக விண்ணப்பதாரர்களின் இடது கை பெருவிரல் ரேகை பதிவு சரிபார்க்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்வு மையங்களுக்கு வரும் விண்ணப்பதாரர்கள் காலை 8 மணி முதல் 9.30 மணிக்குள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். தேர்வு அறைக்குள் கைப்பேசி, ஸ்மார்ட் வாட்ச் உள்ளிட்ட எந்தவொரு மின்னணு சாதனங்களையும் கொண்டுவரக் கூடாது எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 'தேர்வுக்கு வருபவர்கள் நுழைவுச் சீட்டுடன், ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை அல்லது ஓட்டுநர் உரிமம் இவற்றில் ஏதேனும் ஒன்றின் அசலைக் கட்டாயம் உடன் வைத்திருக்க வேண்டும்' என சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் திட்டவட்டமாக அறிவுறுத்தியுள்ளது. இந்த எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே அடுத்தகட்டமான உடல் தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசபக்தி மிக்கவர்களாக திகழ வேண்டும்: வந்தே மாதரம் பாடலின் 150 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் ஓய்வுபெற்ற வட்டாட்சியர் பேச்சு..!



வந்தவாசி, நவ 09:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் வந்தே மாதரம் பாடலின் 150 ஆண்டு விழா நிகழ்வு தேசபக்தி பாடலுடன் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் தலைமை தாங்கினார். ஜவகர்சிறுவர்மன்றஒருங்கிணைப்பாளர் பெ.பார்த்திபன் முன்னிலை வகித்தார். ஆசிரியர் மஹாவீர் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, முன்னாள் இராணுவ வீரரும், ஓய்வுபெற்ற வட்டாட்சியருமான வ. முருகானந்தம் பங்கேற்று, வந்தே மாதரம் பாடல் 150 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில் நாம் அனைவரும் தேசப்பற்று மிக்கவர்களாக திகழ வேண்டும் எனவும், அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நாம் கல்வியறிவு மிக்கவர்களாக உருவாக வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும் வந்தே மாதரம் பாடலை பாடிய மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் சமூக ஆர்வலர் முகமது ஜியா நன்றி கூறினார்.

# சேலம்:குடிசை மாற்று வாரியம் அலுவலகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!



சேலம். நவ: 9

சேலம் மாவட்டம் நான்கு ரோடு பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியம் என்கின்ற நகர்புறம் மேம்பாட்டு வாரியம் அலுவலகத்தின் நேற்று காலை பொதுமக்கள் ஐந்து கோரிக்கைகள் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்

1.சேலத்தில் பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் 2024 ஆம் ஆண்டு மூலம் மானியத் தொகை பெற பணி ஆணை பெற்று வீடு கட்டிக் கொண்டிருக்கும் சிலருக்கு கடந்த பத்து மாதங்களாக மானியத் தொகை வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளனர் இதனால் வீடு கட்டி கொண்டிருக்கும் பயனாளிகள் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர் எனவே நிலுவையில் உள்ள மானிய தொகையை உடனடியாக வழங்கிட வேண்டும்.

2. தற்போது வந்துள்ள பிரதமரின் அனைவரும் வீடு கட்டும் திட்டத்தில் 2.5 லட்சம் ரூபாய் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது மேலும் கட்டுமான சம்பந்தப்பட்ட பொருட்களின் விலை உயர்ந்து உள்ளதால் மானிய தொகையை ரூ 5 லட்சம் ஆக உயர்த்தி வழங்க வேண்டும் எனவும் .

3. வீடு கட்டுவதற்கு அதிகாரிகள் ஆன்லைன் மூலம் பதிவு செய்யுங்கள் உங்கள் இடத்தை நாங்கள் நேரில் வந்து பார்க்கிறோம் என்று கூறுகிறார்கள் நாங்கள் ஆன்லைன் பதிவு செய்த பின் 40 நாட்கள் ஆனாலும் எங்கள் இடத்தை பார்வையில் அதிகாரிகள் வருவதில்லை நாங்கள் போன் மூலம் தொடர்பு கொண்டால் இன்று வருகிறோம் என்று கூறுகிறார்கள் எனவே நாங்கள் விடுமுறை எடுத்து வீட்டில் இருப்பதால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது ஆகையால் இனி வரும் காலங்களில் பதிவு செய்தால் விரைந்து பார்வையிட உத்தரவிட வேண்டும்.

4. தற்போது இதுவரை பதிவு செய்த பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கு பணி ஆணை விரைந்து வழங்கிட வேண்டும்.

5. மானியம் பெற்று வீடு கட்ட இருக்கும் ஒரு சில பயனாளிகளுக்கு விருப்பத்திற்கு ஏற்ப 300 சதுர அடியிலிருந்து 800 சதுர அடி வரை வீடு கட்ட அனுமதி வழங்கிட வேண்டும்.

6. தற்போது பணியில் உள்ள அதிகாரிகள் அடித்தளம் பேஸ்மெண்ட் போட்டுள்ள பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்படும் என்கின்றார்கள் பின்னர் அவர்களே அடித்தளம் போட்டிருந்தால் மானியம் வழங்கப்படாது என்கின்றனர் அதிகாரிகள் பேச்சை நம்பி அடித்தளம் போட்டு உள்ள பயனாளிகளுக்கு பணிவான வழங்கி வீடு கட்ட அனுமதி வழங்க வேண்டும் என ஆறு அம்ச கோரிக்கைகளை வைத்து சேலம் மாவட்ட குடிசை மாற்று வாரிய மேலாளரிடம் சேலம் பச்சப்பட்டி மக்கள் அறக்கட்டளை சேவை நிறுவனத் தலைவர் டாக்டர் வி கே பிரகாஷ் முன்னிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம் செய்து மனு அளித்தனர்

# ஈரோடு எழுமாத்தூர் அருகே செயல்படும் அரசு கலைக்கல்லூரி முதல்வர் மீது பாலியல் புகார்..

## சமூக நலத்துறை அதிகாரி முன்னிலையில் விசாரணை..




ஈரோடு,நவ., 09

ஈரோடு அருகே உள்ள எழுமாத்தூர் பகுதியில் செயல்படும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மீது பாலியார் புகார் எழுந்துள்ள நிலையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அருகே உள்ள எழுமாத்தூர் பகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

இந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வராக ராஜேந்திரன் என்பவர் இருந்து வருகிறார். இவர் மீது பாலியல் புகார் உள்ளிட்ட பல்வேறு குற்றசாட்டுகள் எழுந்துள்ளது.

இந்த நிலையில் இந்த புகார்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமிக்கு தொடர் புகார்கள் வந்துள்ளன..

ஆட்சியருக்கு வந்த புகாரின் அடிப்படையில், இந்த விசாரணை நடத்தப்பட்டு.

இந்த விசாரணை என்பது ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்தில், மாவட்ட சமூக நலத் துறை அலுவலர் சுந்தர வடிவு முன்னிலையில் இந்த விசாரணை என்பது நடைபெற்று வருகிறது. மேலும் சம்பந்தப்பட்ட அந்த அரசு கலைக் கல்லூரியில் பணியாற்றும் அலுவலர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றும் முதல்வர் மீது எழுந்துள்ள இந்த பாலியல் புகார் ஈரோடு மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கடம்பத்தூரில் குடிநீர் மோட்டாருக்கான மின் இணைப்புக்கு ரூ.16 லட்சம் ரூபாய் பாக்கி வைத்திருப்பதால் மின் இணைப்பு துண்டிப்பு

## அதிகாரிகள் அலட்சியம் என பொதுமக்கள் குற்றச்சாட்டு: 200க்கும் மேற்பட்டோர் சாலை மறியல்



திருவள்ளூர் நவ 09 : திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் அகரம் சன் சிட்டி என்ற குடியிருப்பு பகுதிக்குள் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் குடியிருப்பு பகுதிக்குள் அடிப்படை தேவைகளான சாலை, மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட தேவைகளை குடியிருப்புவாசிகளே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் குடியிருப்பு சங்கம் அமைக்கப்பட்டு சங்க நிர்வாகத்திடம் மாதம் தோறும் அப்பகுதி மக்கள் சந்தா செலுத்தி வருகின்றனர். இந்நிலையில் குடியிருப்பு பகுதிக்குள் ஏற்கனவே இருந்த சங்கத்தினர் முறையாக அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவில்லை எனவும் அவர்கள் முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் கூறப்படும் நிலையில் தற்பொழுது புதிய சன் சிட்டி குடியிருப்பு சங்கம் உருவாக்கப்பட்டு அந்த நிர்வாகிகளிடம் சந்தா செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மின் மோட்டாருக்கான இணைப்புக்கு மின்சாரத் துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.16 லட்சம் நிலுவையில் உள்ளது. அதுபோல் குடிநீர் கட்டணமும் ஊராட்சிக்கு முறையாக செலுத்தாததால் கடந்த 5 நாட்களுக்கு முன்னர் சன் சிட்டி பகுதி குடியிருப்பில் வசிக்கும் குடும்பத்தினருக்கு மின்சாரம் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை மின்சார வாரியமும் ஊராட்சி நிர்வாகமும் துண்டித்துள்ளது. இதனைத் தொடர்ந்து கடந்த 5 நாட்களுக்கு மேலாக அப்பகுதிவாசிகள் மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பு இல்லாமல் அவதிபட்டு வந்த நிலையில் மின்சாரத்துறை மற்றும் ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் சன்சிட்டி குடியிருப்பு பொதுமக்கள் திருவள்ளூர் சுங்குவார்சத்திரம் நெடுஞ்சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடிநீர் இணைப்பு மற்றும் மின்சார இணைப்பை உடனடியாக வழங்க வேண்டும். முறைகேட்டில் ஈடுபட்ட சங்க நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை கோஷங்களாக எழுப்பி சாலை மறியலில் ஈடுபட்டனர். வீட்டு மின் இணைப்பிற்கான மின் கட்டணத்தை செலுத்தாத அடுத்த நாளே மின் இணைப்பை துண்டிக்கும் மின்வாரியத் துறை மூன்று ஆண்டுகளாக அலட்சியமாக இருந்தது ஏன் என்றும், மின் இணைப்பை அப்போதே துண்டிக்கவில்லை ஏன் என்றும் கேள்வி எழுப்பினர்.

எனவே மின்வாரிய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் கடம்பத்தூரில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை பேரணியாக சென்று முற்றுகையிடப் போவதாகவும் எச்சரித்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் சமாதான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதை தொடர்ந்து தற்காலிகமாக சாலை மறியலை கைவிட்டு சென்றனர். இந்த சாலை மறியல் போராட்டத் தினால் சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தாட்கோ சார்பில் ஆவடி மாநகராட்சி தற்காலிக தூய்மை பணியாளர்கள் சங்கம் உறுப்பினர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கினார். தூய்மை பணியாளர்களுக்கு தொழில் முனைவு மேம்பாடு மற்றும் திறன் பயிற்சி வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். கூட்டத்தில், திருவள்ளூர் மாவட்ட தாட்கோ மேலாளர் ர.சரண்யா, தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர்கள் நல வாரிய மாநில உறுப்பினர் தி. அரிஷ் குமார், ஆவடி மாநகராட்சி அலுவலர் குமார், ஆவடி மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உலக அமைதி தினத்தை முன்னிட்டு நல்ல மழைப்பொழிவை தருவதற்கு ஆறு நதி மலை ஏரி குளம் குட்டைகளை போற்றுவோம் நீர்நிலைகளில் மலர் தூவி வணங்கி உறுதிமொழியை கரைவெட்டி பறவைகள் சரணாலய ஏரியில் எடுத்த பள்ளி கல்லூரி மாணவர்கள்



அரியலூர். நவ. 9–

அரியலூர் மாவட்டம் கீழக்காவட்டாங்குறிச்சி அருகே உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் உலக அமைதி தினத்தை முன்னிட்டு பள்ளி கல்லூரி மாணவர்கள் கரைவெட்டி பறவைகள் சரணாலய ஏரியில் தூய்மைப்பணி செய்தும் நீர்நிலைகளை மலர் தூவி வணங்கும் நிகழ்ச்சி நல்ல மழைப்பொழிவை பெற நீர்நிலைகளை போற்றுவோம் என்ற உறுதிமொழி நிகழ்வு பனை விதை நடவு நிகழ்வு கரைவெட்டி ஏரிபாதுகாப்பு குழு

தமிழ்நாடு வனத்துறை

நல்லோர் வட்டம் கீழக்காவட்டாங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கரை வெட்டி ஏரி பாதுகாப்பு குழு ஒருங்கிணைப் பாளரும் அகில இந்திய மக்கள் சேவை இயக்க விவசாயப் பிரிவு மாநிலத் தலைவருமான தங்க சண்முக சுந்தரம் நல்லோர் வட்டம் மாவட்ட ஒருங்கிணைப் பாளர் வனஜா வரலாறு மீட்புக் குழு இணை ஒருங்கிணைப்பாளர் ஆண்டிமடம் ஆசிரியர் திருப்பதி மரங்களின் நண்பர்கள் அமைப்பு நன்செய் அறக்குழு கரைவெட்டி ஏரிபாதுகாப்பு குழு இணை ஒருங்கிணைப்பாளர் நேரு கீழக்காவட்டாங் குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் வனச்சரகர் சரவணக்குமார் வனவர் ரஞ்சித்குமார் வனக்காப்பாளர்கள் விக்னேஷ் பாலசுப்ரமணியன் மணிமேகலை வனகாவலர்கள் விசுவநாதன் செல்ல துரை மணிவண்ணன் உள்ளிட்ட அரியலூர் மாவட்ட வனத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பனை விதைப்பு நீர்நிலைகளை வணங்குதல் நீர்நிலைகளை போற்றுவதற்கான உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ் வில் உலக அமைதி தினத்தை முன்னிட்டு நல்ல மழைப்பொழிவை தருவதற்கு ஆறு நதி மலை ஏரி குளம் குட்டைகளை போற்று வோம் என நீர்நிலைகளில் மலர் தூவி வணங்கி பள்ளி கல்லூரி மாணவர்கள் உறுதிமொழியை கரைவெட்டி பறவைகள் சரணாலய ஏரியில் எடுத்தனர். சர்வதேச அளவில் ஈரநிலங்களுக்கான ராம்சார் குறியீடு அங்கீகாரம் பெற்ற கரைவெட்டி பறவைகள் சரணாலய ஏரியை நெகிழிப்பயன்பாடு தவிர்த்து கரைவெட்டி பறவைகள் சரணாலய ஏரியை தூய்மையாக வைத்திருக்கவும் உறுதிமொழி எடுத்தனர். இந்நிகழ்வில் நீர்நிலைகளை போற்றுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்கள் மாணவர்களுக்கு வலியுறுத்தியதாவது மக்கள் கால்நடைகள் குடிப்பதற்கும் விவசாயிகளின் முக்கிய தொழிலான வேளாண்மைக்கும் மூல ஆதாரமாக முக்காலத்திற்கும் வாழ்வளிக்கும் நீர்நிலைகள் நெகிழி கழிவு நீர் குப்பை கூளங்கள் இறைச்சி கழிவுகள் இரசாயன கழிவுகளால் மாசுபடுவதனை தவிர்க்கும் பொருட்டும் நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களான மீன் புழு பூச்சிகள் நண்டு நத்தை தாவரங்கள் வேளாண்மைக்கு உதவி செய்யும் பறவை இனங்களின் எச்சம் இவைகளால் ஏற்படும் நன்மைகள் தொடர்வதற்கும் நீர்நிலைகளில் தேங்கி உள்ள வண்டல் மண்ணை எடுத்து பயன்படுத்துவதன் மூலம் நீர்நிலைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியை அதிகரிக்க இயலுவதோடு இரசாயன உரங்களால் மலடான மண்ணை மீட்கவும் விளைச்சல் பெருகவும் மண்புழுக்கள் நன்மை செய்யும் பூச்சிகளான பட்டாம்பூச்சி தட்டான் உள்ளிட்ட பூச்சியினங்களை காத்து ஒட்டுமொத்த சூழலையும் காக்க இயலும் என்றும் தன்னார்வலர்கள் பலரும் இணைந்து ஏரி குளம் குட்டைகளை மீட்டெடுத்து தூர்வாரும் பணிகளில் ஈடுபட்டு இரசாயன பயன்பாடுகளால் வேளாண்மை செய்து பாழ்பட்ட நிலங்களில் நிலத்தடி நீர் மாசடைந்து உப்பு நீராக மாறி வருவதனை முற்றிலும் தவிர்க்க இயற்கை வேளாண்மையை முன்னெடுக்க நிலத்தடி நீர் உப்புத்தன்மை மாறி நல்ல நீரை செறிவூட்ட இயலுவதோடு மனிதர்கள் கால்நடைகள் பறவை இனங்கள் ஆரோக்கியமாக வாழவும் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கும் நல்ல மழைப்பொழிவை தருவதற்கும் நீர்நிலைகளை பாதுகாக்க நதிகளிலும் ஆறுகள் குளம் குட்டை ஏரிகளின் கரைகளில் பனை உள்ளிட்ட பறவை இனங்கள் தங்குவதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்கும் பறவை இனங்களுக்கு தேவையான உணவுகளான பழங்கள் கொட்டைகள் விதைகள் இவற்றை தரும் மரங்களை தாவரங்களை உணவாக உண்டு வாழ ஆலமரம் பூவரசு அரச மரம் பழ மரங்கள் இலுப்பை நாவல் நீரை சுத்திகரிக்கவல்ல தேத்தாங்கொட்டை மரங்கள் வளர்த்து கரை அரிப்பையும் தடுக்க வேண்டும்என்பதுகுறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# செஞ்சிக்கோட்டையில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் வந்தே மாதரம் பாடல் 150 ஆண்டுகள் நிறைவு விழா



செஞ்சி நவ 09

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக் கோட்டையில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் தேச பக்தி பாடலான வந்தே மாதரம் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு செஞ்சிக்கோட்டை வளாகத்தில் வந்தே மாதரம் பாடல் பாடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாநில செயலாளர் முரளி என்கின்ற ரகுராம ரெட்டியார் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக மாநில இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டிகலந்துகொண்டு பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுடன் சேர்ந்து வந்தே மாதரம் பாடலை பாடி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாநில துணைத் தலைவர் ஏ ஜி சம்பத், மாவட்டத் தலைவர் கே ஆர் விநாயகம் செஞ்சி தொகுதி அமைப்பாளர் வி.பி. என் கோபிநாத், இணை அமைப்பாளர் அன்பழகன் பொதுச் செயலாளர் பாண்டியன் ஒன்றிய தலைவர்கள் தாராசிங் என்கின்ற சிவகுமார் பி ஏழுமலை அசோக்குமார் பிரசன்னா சரவணன் முன்னாள் ஒன்றிய தலைவர் தங்கராமு மாவட்டத் துணைத் தலைவர் என ஏழுமலை பிரச்சார பிரிவு மாநில செயலாளர் தினேஷ் குமார் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர் எஸ் சரவணன்ஞான மணி மாநில செயற்குழு உறுப்பினர் முத்துலட்சுமி மாவட்டத் துணைத் தலைவர் விஜயலட்சுமி மாவட்ட செயலாளர் சிவகாமி மற்றும் மாவட்ட ஒன்றிய அணி பிரிவு நிர்வாகிகள் மற்றும் அலம் பூண்டி ரங்க பூபதி கல்லூரி, கலையூர் ராஜா தேசிங்கு பப்ளிக் பள்ளி, செஞ்சி கலைவாணி மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# செஞ்சி அரசு மருத்துவமனையில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களின் தூய்மை பணி




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஏழுமலை தலைமையில் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் 8.11.2025 சனிக்கிழமை செஞ்சி அரசு மருத்துவமனையில் தூய்மைப்பணி மேற்கொண்டனர். தூய்மை பணியினை பள்ளியின் தலைமை ஆசிரியர் ராமசாமி துவங்கி வைத்தார். நிகழ்வின் போது மருத்துவமனையின் தலைமை மருத்துவர் பாலகோபால், சித்த மருத்துவ அலுவலர் அஜித்தா, செவிலிய பொறுப்பு கண்காணிப்பாளர் ஆதிலட்சுமி, பள்ளி ஆசிரியர்கள் செந்தில்குமார் மற்றும் அசோக் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

# ஜூனியர் ரெட் கிராஸ் அமைப்பு துவக்க விழா.




விழுப்புரம் மாவட்டம், முகையூர், புனித ஜோசப் மெட்ரிக் பள்ளியில் , ஜூனியர் ரெட் கிராஸ் அமைப்பு துவக்க விழா நடைபெற்றது. இதில். பள்ளியின் முதல்வர். அருட்சகோதரி. சலோமி ராணி தலைமையில் தாங்கினார். சிறப்பு விருந்தினராக ஜே.ஆர்.சி. மாவட்டக் கன்வீனர். முனைவர். ம. பாபு செல்வதுரை கலந்துக் கொண்டு ரெட் கிராஸ கொடியேற்றி அமைப்பை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இதில் முகையூர் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் .ஐ. ஜார்ஜ் ஸ்டீபன்,. சி.சகாயநாதன். ஆலோசகர் .பவுல் சகாயநாதன், தன்னார்வலர் சூசைநாதன் ஆகியோர் கலந்துக் கொண்டு வாழ்த்தினர். 50 மாணவ, மாணவிகள் புதியதாக அமைப்பில் இணைந்தனர். பள்ளியின் ஜே.ஆர்.சி ஆலோசகர் இருதயராஜ் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இதில் பள்ளி ஆசிரியர்கள். மாணவர்கள் பங்கேற்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421